1973 ஆகஸ்ட் 6]

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, பள்ளிகளிலே, கல்லூரிகளிலே மாணவர்கள், மாணவியர்கள் மத்தியில் அதிகமாக நல்லதொரு தொடர்புகள் இப்போது கிடையாது, பெண்களைப் பார்த்தால் கண்ணடிப்பதும், கலாட்டா செய்வதுமாக இருக்கிறார்கள். நெருங்கிய தொடர்பு கிடையாது. ஆகவே, ஆரம்பப் பள்ளிகளிலிருந்தே மாணவர்களையும், மாணவியர்களையும் ஒன்றாகப் படிக்கவைக்க வழி செய்து விட்டால், ஸெக்ஸ் எடுகேஷன் சொல்லிக் கொடுத்து விட்டால், சரி இவ்வளவு தானா என்று நினைத்துக் கொண்டு, பேசாமல் விட்டு விடுவார்கள். அரசு அதற்கு வழி வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போதே துவக்கப்பள்ளி, உயர் துவக்கப்பள்ளி ஆகிய இடங்களில் ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிக்கிறார்கள். கல்லூரி மட்டத்தில் புகுமுக வகுப்பில் மட்டும் பெண்கள் சேர்ந்து படிக்கும் நிலை சென்னைப் பல்கலைக் கழகப் பகுதிகளில் இல்லை. மதுரைப் பல்கலைக் கழகப் பகுதிகளில் புகுமுக வகுப்பில் பெண்களைச் சேர்த்துக் கொள்ளலாம்—சில பல வசதிகளைச் செய்து கொடுத்தால்—என்று இருக்கிறது. நான் முதலிலே கூறியது மாதிரி, பக்கத்தில் கேரளத்தில் வைத்திருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் அனுபவத்தைக் கருத்தில் கொண்டு, அது எந்த அளவுக்கு அங்கே வெற்றி பெற்று இருக்கிறது என்பதை ஆராய்ந்து அறிந்த பின், நாமும் அதைப் புகுத்துவது பற்றி ஆலோசிக்கலாம்.

மாதிரிப் பள்ளிகள்.

***30 வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய அரசின், மாவட்டத்திற்கு ஒரு மாதிரிப் பள்ளி ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ், வரும் நிதி ஆண்டில் எத்தனை பள்ளிகள் துவங்கப்பட இருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இத் திட்டம் மைய அரசினரால் இன்னும் ஏற்கப்படவில்லை.

[1973 ஆகஸ்ட் 6

திரு. சு. துரைசாமி: தலைவரவர்களே, மத்திய அரசால் அமைக்கப்படவில்லை என்று சொன்னால், அதற்கு மாநில அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மத்திய அரசிலே ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு மாதிரித் துவக்கப்பள்ளி—மாவட்ட அளவிலே ஒரு உயர்நிலை மாதிரிப் பள்ளி—அமைக்க வேண்டுமென்ற கருத்து கல்வியமைச்சர்கள் மாநாட்டில் மத்திய கல்வியமைச்சர் அவர்களால் எடுத்துத் தெரிவிக்கப்பட்டது. அது பற்றி ஆராய்ந்து ஒரு முடிவு சொல்வதாகக் கூறியிருக்கிறார்கள். இன்னும் மத்திய அரசின் பரிசீலனையில் அந்தக் கருத்து இருந்து வருகிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், இரண்டு இடங்களில் மாதிரி உயர் துவக்கப் பள்ளிகள் வைக்கலாம் என்று மாநில அரசு முடிவு எடுத்து இருக்கிறது. புதுக்கோட்டையில் ஒரு மாதிரி உயர் துவக்கப் பள்ளி ஆண்களுக்காக சென்ற ஆண்டு துவக்கப்பட்டு, நடைமுறைக்கு வந்திருக்கிறது. சென்னையில் இப்படிப்பட்ட ஒரு மாதிரிப் பள்ளி பெண்களுக்காகத் துவக்கி நடத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அமைக்க இருக்கின்ற மாதிரிப் பள்ளிகளின் சிறப்பு அம்சம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாதிரிப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் எம்.ஏ. பட்டதாரியாக இருக்க வேண்டும். அந்தப் பள்ளிகள் பயிற்சிக் கல்லூரிக்குப் பக்கத்திலேயே இருக்க வேண்டும். பயிற்சிக் கல்லூரிக்குப் பக்கத்திலேயே இருப்பதால், அங்கே பயிற்சித் தருவதற்குப் பயன்படுத்துவதற்காக என்று அல்ல—அந்தப் பயிற்சிப் பள்ளியில் இருக்கும் பேராசிரியர்கள் இந்தப் பள்ளிகளிலும் பணியாற்றுவதற்கான சூழ்நிலை ஏற்படுத்துவதற்குத்தான். இந்தப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்காக மாநில அளவில் ஒரு பரிட்சை நடத்தப்படும். அந்தத் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் தான் இதில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இதிலே சேர்க்கப்படுபவர்களில் 50 சதவிகிதம் விடுதியில் தங்கிப்

1973 ஆகஸ்ட் 6]

படிக்க வசதி செய்யப்படும். அதே போல், சேர்க்கப்படுபவர்கள் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்படுவதால், இங்கே வந்து படிப்பதற்குப் பயணப்படி, இலவச உணவு, உறையுள் ஆகியவையும் 25 சதவிகிதம் மாணவர்களுக்குத் தரும் அளவிலும், இலவச உணவு, உறையுள் இல்லாமல் மற்ற வசதிகள், சீருடை வழங்குதல் போன்ற வசதிகள் 25 சதவிகிதம் மாணவர்களுக்குத் தருகின்ற அளவிற்கும் திட்டம் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு பெண்களுக்கு என்று மாதிரிப் பள்ளி அமைக்க முயற்சி இங்கே விரைவில் எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, இந்த மாடல் ஸ்கூல் ஆரம்பிப்பதற்கு மத்திய அரசாங்கம் முழுச் செலவை ஏற்றுக் கொள்கிறார்களா, அல்லது தமிழ்நாடு அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறார்களா, அல்லது கிராண்ட் ஏதாவது தருவதாகக் கூறப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த மாதிரிப் பள்ளிகள் நடத்துவதற்கான முழுச் செலவையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. அதை நிர்வகிப்பது, ஆசிரியர்கள் நியமனம் செய்வது, ஆகியவை மாநில அரசின் பொறுப்பில் இருக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. வேண்டுமென்றால், மத்திய அரசின் ஓரிரண்டு பிரதிநிதிகள் அந்த நிர்வாகக் குழுவில் இருக்கலாம். ஆனால் முழுப் பொறுப்பையும் மாநில அரசின் கையில் விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அதைக் கருத்தளவில் மத்திய கல்வியமைச்சர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

Delegation from Bangla Desh.

*31 Q.—Thiru R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether any delegation from Bangla Desh had discussions with the officials of the State Government during January 1973; and

(b) if so, the details thereof?